தமிழ்நாடு சட்டமன்றப் பேரவை.

சனிக்கிழமை, 1980, ஜூலை 5.

சென்னை செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டமன்றப் பேரவை மண்டபத்தில் காலை 9-00 மணியளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் திரு. க. இராசாராம் அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

மாண்புமிகு பேரவைத் தலைவர் :

'' சொல்லுக சொல்லைப் பிறிதோர்சொல் அச்சொல்லை
வெல்லுஞ் சொல் இன்மை அறிந்து ''

ஒருவர் ஒரு சொல்லைச் சொல்லும்போது மற்றவர்கள் அச்சொல்லை மறுத்துச் சொல்லாத வண்ணம் நன்கு சிந்தித்துப் பார்த்தே சொல்லுதல் வேண்டும்.

1. வினாக்கள்—விடைகள்.

உடுக்குறியிட்ட வினாக்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : குறுகியகால வினா எண் 4

திரு. ப. பொன்னுரங்கம் : தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்ப விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினாக்கள்—விடைகள் நேரத்தில் ஒழுங்கு பிரச்சினை எழுப்பக்கூடாது. வினா நேரம் முடிந்தபிறகுதான் ஒழுங்குப் பிரச்சினை எழுப்பப்பட வேண்டும்.

திரு. ப. பொன்னுரங்கம் : ஒழுங்குப்பிரச்சினை எந்த நேரத்திலும் எழுப்பப்படலம். நான் விதியைப் படிக்க விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : படியுங்கள்.

திரு. ப. பொன்னுரங்கம் :

" A point of order shall relate to the interpretation or enforcement of these rules or such Articles of the Constitution as to regulate the business of the House........

என்று விதியில் இருக்கிறது. இன்று வந்துள்ள குறுகியகாலவினா 'வேலைக்கு உணவுத் திட்டம்' என்பதுபற்றி நானும் கேள்வி கொடுத்து பத்து நாட்கள் ஆகிவிட்டன. அதையும் இதிலே சேர்த்திருக்க வேண்டும். இதை ஏன் எடுத்துக் கொள்ளவில்லை?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : தாங்கள் கொடுத்தது குறுகியகால வினாவாக இருந்தால் இதிலே வந்திருக்கும்.

திரு. ப. பொன்னுரங்கம் : தாங்கள் நேற்றே ரூலிங் கொடுத்து இருக்கிறீர்கள்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : 15 நாட்களுக்குள் உடுக்குறியிட்ட வினாக்களுக்கு விடைகளைத் தயாரித்து அனுப்ப வேண்டுமென்று சொல்லி இருக்கிறோம். ஆனால் உறுப்பினர்கள் எல்லோரும் என்ன என்ன அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள் என்பதையெல்லாம் பார்த்து ஒன்றோடு ஒன்று சேர்த்து துறைகளுக்கு அனுப்புவது என்பது இந்தத் துறைக்குக் கஷ்டமாக இருக்கும். தாங்கள் கொடுத்தது உடுக்குறியிட்ட வினா, இப்போது வருவது குறுகியகால வினா. இந்தக் கேள்வியை ஒட்டி தாங்கள் என்ன கேட்க வேண்டும் என்று விரும்புகிறீர்களோ அதைத் துணைக் கேள்விகள் மூலமாகக் கேட்டுக் கொள்ளலாம்.

வேலைக்கு உணவுத் திட்டம்.

*கு. கா. வி. வினா எண். 4—திரு. குமரி அனந்தன்: மாண்புமிகு துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வேலைக்கு உணவுத் திட்டத்தின் கீழ் மத்திய அரசிடமிருந்து எவ்வளவு அரிசி, கோதுமை வாங்கப்பட்டிருக்கிறது.

(ஆ) எந்தெந்த திட்டங்கள் வேலைக்கு உணவு திட்டத்தின் கீழ் நிறைவேறியுள்ளன.

மாண்புமிகு திரு. ப. குழந்தைவேலு : (அ) 1979–80 ஆம் ஆண்டுக்கு மத்திய அரசு 73,000 டன்கள் அரிசியை இம்மாநிலத்திற்கு உழைப்புக்கு உணவு திட்டத்தின் கீழ் முழுமானியமாக ஒதுக்கியது. 1980–81-ம் ஆண்டிற்கு முதல் கட்டமாக 27,000 டன்கள் அரிசியை ஒதுக்கீடு செய்து, அதில் 13,500 டன்கள் விநியோகம் செய்ய மத்திய அரசு அனுமதித்துள்ளது. இந்த 13,500 டன்கள் அரிசியை ஒவ்வொரு மாவட்டத்திற்கும் பகிர்ந்தளிக்க ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளது. இத்திட்டத்தின் கீழ் கோதுமை ஏதும் பெறப்படவில்லை.

(ஆ) ஏரிகளில் தூர் வாருதல், ஏரிகள், கால்வாய்கள் வெட்டுதல், பாசன வரத்து கால்வாய்களை பழுதுபார்த்தல், வன வளர்ப்புப் பணிகள், மண்வளப் பாதுகாப்பு, சாலைகள் போடுதல், சாலைகளைப் பழுதுபார்த்தல், பள்ளிக் கட்டிடங்கள் கட்டுதல் போன்ற நிலையான சமூக உடமைகளை உருவாக்கும் எல்லா வேலைகளையும் இத்திட்டத்தில் எடுத்து செயல் படுத்த ஆணைகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.